**செய்தி வெளியீடு எண்: 508** **நாள்: 01.08.2018**

## செய்தி வெளியீடு

மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென சிறப்பான வகையில் பணிகளை மேற்கொண்டு வரும் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் பல வகைகளில் சிறப்பான திறமைகளை வெளிக்கொணர்ந்திடும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரை ஊக்குவித்திடும் விதமாக மத்திய அரசால் ஆண்டுதோறும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. 2018 ம் ஆண்டிற்கான ''தேசிய விருதுகள்'' மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் நலச் சட்டம் 2016 ல் வரையறுக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் வகைகளுக்கேற்ப கீழ்க்கண்டவாறான பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படவுள்ளதாக மத்திய அரசால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது .

1) சிறப்பாக பணிபுரியும் மாற்றுத்திறனாளி /சுயதொழில் புரிபவர் (Best Employees / Self Employed with disabilities) 2) /சிறந்த பணியமர்த்தும் அலுவலர் மற்றும் சிறந்த நிறுவனம், (Best Employers and Placement Officer or Agencyl) 3) மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த தனிநபர் / நிறுவனம், (Best Individual and Institution working for the cause of persons with disabilities)., 4) மாற்றுத் திறனாளிகளில் முன்மாதிரியாக திகழ்பவர்கள் (Role Model), 5) மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் சிறந்த செயல்முறை ஆராய்ச்சி பணி/தொழில் நுட்பம் அல்லது கண்டுபிடிப்பு, (Best Applied Research or Technologyl Innovation / Product Development aimed at improving the life of persons with disabilities) 6) மாற்றுத் திறனுடையோர்களின் தடையற்ற சூழலுக்கான உள்கட்டமைப்புகளை ஏற்படுத்திய சிறந்த பணிக்காக (Outstanding Work in the Creation of Barrier-Free Environment for the Persons with Disabilities) 7) மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வு பணிகளை மிக சிறப்பாக மேற்கொண்ட மாவட்டம் (Best District in providing Rehabililtation Services ) 8) தேசிய மாற்றுத் திறனுடையோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் திட்டத்தினை செயல்படுத்தும் மாநில அளவிலான முறைப்படுத்தும் நிறுவனம் (Best State Channelizing Agency of the Natilonlal Handicapped Finance and Development Corporation ) 9) சிறந்த படைப்பாற்றல் திறனுடைய , மாற்றுத் திறனுடைய நபர்கள் (Outstanding Creative Adult Persons with disabilities) 10) சிறந்த படைப்பாற்றல் திறனுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகள் (Best

Creative Child with Disabilities) 11) சிறந்த பிரெய்லி அச்சகம் (Best Braille Press) 12) மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயன்படுத்த உகந்ததான சிறந்த இணையதளம் (Best Accessible Website), 13) மாற்றுத் திறனாளிகளின் அதிகார பகிர்வினை ஊக்கப்படுத்தும் சிறந்த மாநிலம் (Best State in promoting empowerment of persons with disabililties) மற்றும் 14) சிறந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர் (Best Sports persons with disabilities) ஆகிய 14 பிரிவுகளில் தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் / நிறுவனங்கள் இதற்கான விவரங்களை www.disabilityaffairs.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும், உரிய விண்ணப்ப படிவத்தை இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகம், 5, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், காமராஜர் சாலை, சென்னை– 5 ஆகியவற்றிலிருந்து பெற்று **அனைத்து இணைப்புகளுடன்** வருகிற 12.08.2018 க்குள் 2 நகல்களில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அவர்களின் பரிந்துரையுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 5, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், காமராஜர் சாலை, சென்னை–5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 12.08.2018 க்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கலாகிறது .

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**